வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# பாரதியார் கவிதைகளில் கல்வியியல் சிந்தனைகள்

**முனைவர் ரெ. நல்லமுத்து**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620002

**ஆய்வுச் சுருக்கம்:**

மகாகவி பாரதியார் பெண்ணிய சிந்தனையாளர், விடுதலைப் போராளி, தொலை நோக்குடன் சமுதாயத்தை அனுகியவர், தமிழ்க்கவிதை வரலாற்றில் மிகப்பெரிய புரட்சி செய்த மகாகவிஞர். காற்றாற்று வெள்ளம் போல, அவருடைய எழுத்துக்கள் அவரை மிகப்பெரிய பேரறிஞராக அடையாளம் காட்டுகின்றன. கல்வி பற்றிய அவருடைய கருத்துக்களைத் தொகுத்துப் பார்க்கும்போது கல்வியியல் சிந்தனையாளர், கல்வியியல் கோட்பாடுகளில் வரம்பற்ற ஞானமும் தொலை நோக்குத் தரிசனமும் உடையவராக அவரை உணரமுடியும். கல்வி பற்றிய அவருடைய கருத்தாடலில், கல்வியின் நோக்கம், அணுகுமுறை, கல்வி நிகழ்த்திட்டம், பாடத்திட்டம், பயிற்றுமுறைகள், ஊடகங்கள், மதிப்பிடுதல் உள்ளிட்ட அனைத்துமே நன்றாக உள்வாங்கப்பட்டுள்ளது.

**முன்னுரை:**

பாரதி, தமிழ்க்கவிதை வரலாற்றில் மிகப்பெரிய புரட்சி செய்த மகாகவிஞர், பெண் விடுதலைக்குக் குரல் கொடுத்த பெண்ணிய முன்னோடி, தமிழை வளப்படுத்திய தமிழியப்பாவலன் என்றெல்லாம் பல்வகைகளில் அடையாளம் காண முடியும்' உண்மையில் அவர் பரிமாணம் எல்லையற்று விரிகிற அற்புதங்களைத் தருகின்றவை. தொடத் தொடச் சுரக்கும் சுனைபோல, அவருடைய எழுத்துக்கள் அவரை மிகப்பெரிய பேரறிஞராக அடையாளம் காட்டுகின்றன. 'கல்வி' பற்றிய அவருடைய கருத்துக்களைத் தொகுத்துப் பார்க்கும்போது கல்வியியல் பேரறிஞராக - கல்வியியல் கோட்பாடுகளில் வரம்பற்ற ஞானமும் தொலை நோக்குத் தரிசனமும் உடையவராக - அவரை நம்மால் உணரமுடியும். கல்வியியல் திட்டமிடுதல் மற்றும் செயலாக்கத்தில் தொலை நோக்குப் பார்வை காலத்தின் கட்டாயமாகிறது. அவ்வகையில், கல்வியியலில் தொலை நோக்கோடு சிந்தித்து, ஒரு முழுமையான கல்வியியல் கட்டமைப்பை உருவாக்கித் தந்து, இன்றைய கல்வி முறைக்கும், எதிர்காலக் கல்வி முறைக்கும் அடித்தளமிட்டவர் பாரதி எனலாம்.

கல்வி என்பது ஒவ்வொரு தேசத்துக்கும் உயிர்நாடி போன்றது. ' அந்தக் 'கல்வி' என்பது தேசியக் கல்வியாக எல்லோருக்கும் பயன்தர கூடியதாக இருக்கவேண்டும். கல்வி மூலம் நமது பாரம்பரியம், பண்பாடு, கலாச்சாரம்,

மனிதநேயம் ஆகியவற்றை மற்ற நாட்டினருக்கும் விளங்கச் செய்வதும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் கடமையாக இருக்கவேண்டும் என்று இருபதாம் நூற்றாண்டுகளில் இதழ்களின் வாயிலாக எழுதியவர் பாரதி. இன்று நம் தேசத்தில் முன்னெடுத்துள்ள கல்விக்கொள்கையை உற்றுநோக்கும் போது, பாரதியின் கொள்கை முழக்கம் பரந்து விரிந்துள்ளது எனலாம். ஆங்கிலேயர்களின் கல்விக்கொள்கையை எதிர்க்க வேண்டும் என்ற நோக்கில் இக்கல்விக் கொள்கையை முன்வைத்தார் என்று சிலர் விமர்சனம் செய்வதும் ஒப்பு நோக்கதாகவும் உள்ளது.

**கல்வியின் தேவை**

மனித வாழ்வின் அடிப்படைத் தேவை உணவு, உடை, உறைவிடம். ஆனால்

**"வயிற்றுக்குச் சோறிட வேண்டும்**

**இங்கு வாழும் மனிதருக்கு எல்லாம்**

**பயிற்றிப் பல கல்வி தந்து**

**இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்"1 (**பாரதி. பன்முகப்பார்வை**)**

என்னும் கவிதை வரிகளின் மூலம் உணவுக்கு இணையான முக்கியத்துவத்தை கல்விக்கும் அளித்திருக்கிறார் பாரதியார்.

**"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்**

**ஆலயம் பதினாயிரம் நாட்டல்**

**அன்ன யாவினும் புண்ணியம் கோடி**

**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"2 (**பாரதி. பன்முகப்பார்வை**)**

என்னும் கவிதையின் மூலம் பல்லாயிரம் பேருக்கு உணவளிக்கும் அன்ன சத்திரங்களையும் பதினாயிரம் கோவில்களையும் கட்டுவதையும்விட ஓர் ஏழைக்கு கல்வி கற்பிப்பதே மேன்மையான செயல் என்று வரையறுத்திருக்கிறார். இறைநம்பிக்கையாளரான பாரதி இறைப்பணியைவிட கல்விக்குக் கூடுதல் முக்கியத்துவம் அளித்திருக்கிறார். கல்வி அளிப்பதன் மூலம் இறைவனை மகிழ்வித்து கூடுதல் புண்ணியம் பெற முடியும் என்று மத நம்பிக்கைக்கு மறுவிளக்கம் கொடுக்கிறார்.

இந்நிலையில் பாரதியின் பெண்கல்வி பற்றிய சிந்தனை கல்வியியல் தொலை நோக்காக அமைவதைக் காணமுடிகிறது.

**"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**

**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்**

**எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்**

**இளப்பில்லை காணென்று கும்மியடி"3 (பாரதி, பெண்கள் விடுதலைக்கும்மி )**

என்றும்,

“ **ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்**

**றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்**

**வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற**

**விந்தை மனிதர் தலைகவிந்தார்”4 (பாரதி , பெண்கள் விடுதலைக் கும்மி )**

என்றும் பாடுகிறார்.

‘பெண்களுக்கும் ஆண்களைப் போலவே உயர்தரக் கல்வியின் எல்லாக்கிளைகளிலும் பழக்கம் ஏற்படுத்த வேண்டும்’ என்றும், பெண்கள் வெளிநாடுகள் சென்று உயர்கல்வியையும் கற்றுவர வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார். கொஞ்சம் கொஞ்சம் பலதுறைகளில் பயிற்சி வாய்ந்திருக்கும் தமிழ் சகோதிரிகள் இரவு பகலாகப் பாடுபட்டு அவ்வத் துறைகளில் நிகரற்ற தேர்ச்சி பெற முயலவேண்டும். இடைவிடாத பழக்கத்தால் தமிழ் மாதர் தமக்குள்ள இயற்கை யறிவை மிகவும் உன்னத நிலைக்குத் கொணர்ந்துவிடுதல் சாலவும் எளிதா ம். சற்றே ஊன்றிப் பாடுபடுவார்களாயி ன், தமிழ் மாதர் அறிவுப் பயிற்சிகளிலே நிகரற்ற சக்தி படைத்து விடுவார்கள். எனவே பலவிதமான சாஸ்திரங்கள் படித்துத் தேறுங்கள்ளூ தமிழ்ச் சகோதரிகளே ! அங்ஙனம் தேறியவர்களில் சிலரேனும் வெளிநாடுகளுக்குப் போய் கீர்த்தி சம்பாதித்துக் கொண்டு வாருங்கள் என்கிறார் (பாரதி தமிழ், ப.21). ஆண்குழுந்தைகளுக்கு மட்டுமன்றி பத்துவயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கும் தேசியக் கல்வியைக் கட்டாயம் கற்பிக்க வேண்டும் என்பது பாரதி வலியுறுத்தும் கருத்தாகும்.

முப்பெரும் கூறுகள் பாரதியின் கல்வியியல் தொலை நோக்கில், பெயர்த்தல், கற்றல், இயற்றல் என்பவை முப்பெரும் கூறுகளாக அமைகின்றன.

**“புத்தம் புதிய கலைகள் - பஞ்ச**

**பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும் மெத்த வளருது மேற்கே - அந்த**

**மேன்மைக் கலைகள் தமிழினி ல் இல்லை...**

**சென்றிடுவீர் எட்டுத் திக்கும்**

**கலைச் செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்”5**

**(பாரதி , தமிழ்த்தாய்)**

என்று இருக்கும் நிலையினைச் சுட்டி, இயற்கையைப் பற்றிய ஆராய்ச்சியிலும், பஞ்ச பூதங்களைப் பற்றிய ஆராய்ச்சியிலும் மேலை நாட்டவர் முன்னிலையில் இருப்பதால், அவற்றை தமிழ்ப்படுத்தியே தீரவேண்டும் என்கிறார்.

**“மந்திரம் கற்போம் வினைத்தந்திரம் கற்போம்**

**வானையளப்போம் கடல் மீனையளப்போம்**

**சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்**

**சந்தி தெருப்பெருக்கும் சாத்திரம் கற்போம்”6**

**(பாரதி, பாரததேசம்)**

என்று, வானியல், கடலியல், சுற்றுச்சூழலியல் போன்ற பல துறைகளையும் கற்றுத்தேர்வோம் என்பது, பாரதியின் ‘கற்றல் தொலைநோக்காக’ அமைகிறது.

கல்வியே சமூக ஒழுங்கைக் கட்டமைக்கிறது என்பதிலும், கல்வியால் சமூகத்தினரிடம் சுதந்திர மனப்பான்மையையும், தன்னிகரில்லா அறிவு தளத்தையும், அதன்வழி அடிமைத் தளையை அறுத்தெறியும் சூழலையும் உருவாக்க முடியும் என்பதிலும் பாரதி முழுநம்பிக்கை கொண்டிருந்ததை அறிய முடிகிறது.

**உலகை உயர்த்தும் கல்வி**

பாரதியார் வாழ்ந்த காலகட்டத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியில் இந்திய மக்களில் பெரும்பகுதியினருக்கு கல்வி கிடைத்திருக்கவில்லை. அதனால் அவர்கள் வறுமையிலும் அறியாமை இருளிலும் ஆழ்ந்திருந்தனர். ஒடுக்குபவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் இரண்டு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய யதார்த்தமாக சாதிய ஒடுக்குமுறையும், ஆண்களுக்கு அடங்கி நடக்க வேண்டியது பெண்களின் கடமை என்று இருபாலினத்தவரும் ஏற்றுக்கொண்டதாக இருந்தன. இத்தகைய சூழலைக் கல்வி மூலமாகவே மாற்ற முடியும் என்று உறுதியாக நம்பியவர் பாரதியார். இது குறித்து அவர் எழுதிய பல கவிதைகளும் கட்டுரைகளும் இந்தியாவில் கல்வியின் முக்கியத்துவத்தைத் தொடர்ந்து வலியுறுத்திய முன்னோடிச் சிந்தனையாளர்களில் ஒருவராக அவரை அடையாளம் காட்டுகின்றன.

**பாடத்திட்டம்**

பாடத்திட்டம் (Syllabus) என்பது ஒவ்வொரு பாடத்திலும் என்னென்ன பாடப்பகுதிகள் இடம் பெற வேண்டும் என்பது பற்றிய திட்டமாகும். எத்தகைய பாடங்களைப் படிக்கவேண்டும் என்பதைக் காலச் சூலுக்கேற்ப அரசும் கல்வியாளரும் திட்டமிடுவர்’ சமகாலச் சிக்கல்களை எதிர்கொள்வதற்கான வல்லமையையும், சிறந்த தரமுடைய மனிதாக வாழ்வதற்கான தகுதியையும் மாணவருக்கு அளிக்கும் வகையில் அவர் எந்தெந்தப் பாடங்களைக் கற்கவேண்டும் என்பதையே ‘கல்வி நிகழ்திட்டம்’ என்கிறோம். பாடத் திட்டம் (Syllabus) என்பது ஒவ்வொரு பாடத்திலும் என்னென்ன பாட அலகுகள் கற்பிக்கப்பட வேண்டும் என்பதைப்பற்றி அவ்வப்பாடத்தில் புலமைபெற்ற புலமையாளர்கள் திட்டமிடுவதாகும்.

இக்காலக் கல்வி அமைப்புகளுக்கு வழிகாட்டக்கூடிய வகையில் ஏறத்தாழ எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே அவர் சிந்தித்துப் பார்த்திருக்கிறார் என்பது நினைத்து நினைத்து வியக்கத்தக்கது ஆகும். கல்வியியலில் தெளிவான நெறிப்பாடுடையவராய், மேலைநாட்டுக் கல்விக் கோட்பாடுகளை அப்படியே நகலெடுக்காமல், நம் காலச் சூழலில் நம் நாட்டுச் சிறுவர்களுக்கு எத்தகைய கல்விப் பயிற்சியை அமைக்கவேண்டும் என்பதை மிகத்தெளிவாக - ஒரு

தலைசிறந்த கல்வியியல் அறிஞராக எடுத்துரைக்கிறார். ‘கல்வி’ பற்றிய அவருடைய கருத்தாடலில், கல்வியின் நோக்கம், அணுகுமுறை, கல்வி நிகழ்திட்டம், பாடத்திட்டம், பயிற்றுமுறைகள் இருக்க வேண்டும் என்ற சிந்தனை உடையராகப் பாரதி திகழ்ந்தார்.

பாரதியார் வாழ்ந்த காலத்தில், ஆங்கிலேய அரசும், அரசு நிர்வாகத்திற்குத் துணை போன கல்வியாளர்களும் அரசு நடைமுறைத் தேவைக்கேற்ப கல்வி அமைப்பையே பாடத்திட்டங்களையே வரைந்தனர்’ இது இயற்கைதான்: ஆனால், தொலைநோக்குப் பார்வையில், சமகால ஆங்கில அரசுக்கு மாற்றான ஓர் அரசு மற்றும் புதிய சமூக அமைப்பை உருவாக்க விரும்பிய பாரதி தானே ஒரு புதிய கல்வித்திட்டத்தையும், பாடத்திட்டத்தையும் அறிமுகம் செய்தார்.

**ஆங்கிலக் கல்வியின் அவலம்**

இந்தியர்களுக்கு எத்தகைய கல்வி கற்பிக்கப்பட வேண்டும், கல்வியில் எவற்றுக்கெல்லாம் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் பாரதிக்கு தீர்க்கமான, தெளிவான கருத்துகள் இருந்தன. இன்று கல்வித் துறையில் நிலவும் சிக்கல்களுக்கு மாற்றாக கல்வித் துறை செயற்பாட்டாளர்களால் முன்வைக்கப்படும் சிந்தனைகள் பலவும் நூறாண்டுகளுக்கு முன்பே பாரதியிடம் வெளிப்பட்டிருக்கின்றன. தாய்மொழி குறித்த பாரதியின் கருத்துகள் அவற்றில் முதன்மையானவை. ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி உட்பட பல மொழிகளில் தேர்ச்சிபெற்றிருந்த பாரதி இந்தியர்கள் பல மொழிகள் கற்பதை ஊக்குவித்தார். அதே நேரம் பிற மொழிகளைக் கற்பதற்கு முன் தாய்மொழியில் தேர்ச்சிபெற்றிருப்பதை அடிப்படைத் தகுதியாக வரையறுத்தார்.

ஆங்கிலவழிக் கல்வியை அவர் ஏற்கவில்லை. ‘சுயசரிதை’ என்னும் நெடுங்கவிதையில் ஆங்கிலக் கல்வியின் அவலநிலை குறித்து ஆழ்மன வேதனையை வெளிப்படுத்துகிறார். “*தந்தை சின்னசாமி திருநெல்வேலிக்கு அனுப்பி ஆங்கிலக் கல்வி படிக்க வைத்தது குறித்து மனம் நொந்து பதிவுசெய்துள்ளார். சிங்கக்குட்டியிடம் புல்லைக் கொடுத்துச் சாப்பிடச் சொல்வது அது*” என்று அவர் வர்ணித்துள்ளார். வெள்ளையர்களிடம் கைகட்டி சேவகம் செய்ய விரும்புவோரும் ஒற்றர்களும் பயிலும் கல்வி என்று ஆங்கிலக் கல்வியை இடித்துரைக்கிறார்.

கணிதத்தைப் பன்னிரண்டு ஆண்டுகள் கற்பிக்கும் இந்தக் கல்வி முறை, கண்களுக்குத் தெரியும் நட்சத்திரத்தை முழுமையாகப் புரிந்துகொள்ள வழிவகுப்பதில்லை. வணிகத்தையும் பொருளாதார நூல்களையும் கற்பவர்கள் நாட்டில் நிலவும் பொருளிழப்பை, பொருளாதார சீர்கேட்டைக் கேள்வி எழுப்பக் கற்பதில்லை அவற்றின் காரணத்தையும் கண்டறிவதில்லை என்று ஆங்கிலேயர்கள் அறிமுகப்படுத்திய கல்வியின் குறைகளைப் பட்டியலிடுகிறார். இவற்றுக்கு மாற்றாக இந்திய மன்னர்கள், அறிஞர்கள், புலவர்கள், கவிஞர்கள் ஆகியோரைப் பற்றி இந்திய மாணவர்கள் கற்க வேண்டும், இந்தியாவின் வரலாறு அனைவருக்கும் கற்பிக்கப்பட வேண்டும் என்று முழங்கினார் பாரதியார்.

**முழுமையான வளர்ச்சிக்கான கல்வி**

இந்தக் கருத்துகளை வைத்து தன் நாடு, தன் இனம், தன் மொழி மட்டுமே சிறந்தது என்னும் குறுகிய பார்வை கொண்ட அடிப்படைவாதிகளின் பட்டியலில் பாரதியாரை இணைத்துவிட முடியாது. எழுத்து, படிப்பு, கணக்கு, சரித்திரப் பாடங்கள், பூமி சாஸ்திரம் (புவியியல்), சமயக் கல்வி, ராஜ்ய சாஸ்திரம் (சமூகவியல்), பொருள் நூல் (பொருளாதாரம், வணிகம்), பௌதிக சாஸ்திரம் (அறிவியல் கல்வி), தொழில் கல்வி, சரீரப் பயிற்சி (உடற்கல்வி) என ஒரு மாணவரின் முழுமையான வளர்ச்சிக்குத் தேவையான அனைத்தையும் உள்ளடக்கியதாக இருந்தது பாரதி முன்மொழிந்த கல்வித் திட்டம். அதோடு மேலை நாடுகளில் நிகழ்ந்துள்ள அறிவியல் முன்னேற்றங்களும் புதிய தொழில்நுட்பங்களும் தமிழிலேயே கற்பிக்கப்படும் அளவுக்கு தமிழ் மொழிபெயர்ப்புகளும் கலைச்சொல்லாக் கங்களும் நிகழ்த்தப்பட வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறார்.

ஒரு மாணவரை வெறும் அறிவாளியாக மட்டும் உருவாக்குவதில் பாரதிக்கு நம்பிக்கையில்லை. பன்முகப்பட்ட பண்பியல், திறன் வளர்ச்சிகளையும் அவர் விரும்பினார். அவர் அறிமுகப்படுத்தும் பாடத்திட்டங்களைப் பின்வருமாறு விரிவாகப் பார்க்கலாம்.

**பாடத் திட்டம்: அறிவுப்புலக் கல்வி**

ஒரு மாணவன், தான் மேற்கொள்ளும் கல்விப் பயிற்சியில் எந்தெந்தப் பாடங்களைக் கற்கவேண்டும் என்பதில், மகாகவி பாரதியார் மிகத் தெளிவான கருத்தியல் கொண்டிருந்தார். அவர் வகுத்தளித்த நிகழமைப்பில், கீழ்க்காணும் பாடங்கள் அறிவு சார் பாடத் திட்டமாக அமையும் :

1) எழுத்து
2) படிப்பு
3) கணக்கு
4) வரலாறு
5)புவியியல்
6) சமயப் படிப்பு
7) அரசியல்
8) பொருளியல்
9) அறிவியல்

மேற்காணும் பாடங்கள் ஒரு கல்விப்பயிற்சியில் மாணவர் கற்கவேண்டிய அடிப்படைப் பாடங்களாகும். அவற்றைப் பற்றி பாரதியின் பார்வையில், விரிவாகக் கீழே காணலாம்.

**எழுத்து :**

எழுத்துக் கல்வி என்பது மொழிக் கல்வியைக் குறிக்கும்’. மொழிக்கல்வி என்பது ஒரு வகையில் மொழியின் அமைப்பு, பயன்படுத்தும் நிலை, இலக்கணக் கூறுகள் ஆகியவற்றைக் குறிப்பதுடன், மொழியில் இயங்கும் இலக்கியங்களையும் குறிப்பதாகும். பாரதியார் முன் வைக்கும் “தேசியக் கல்வி” என்னும் கொள்கையில் தாய்மொழியே முதலிடம் பெறுகிறது. ”இந்த முயற்சிக்கு...(தேசியக் கல்விக்கு)

**‘தமிழ் பாஷையே முதற் கருவியாக ஏற்படுத்தப்படும் என்பதைத் தம்பட்டம் அறைவிக்கவேண்டும்’** (1:229)” என்றும், **”தமிழ்நாட்டில் தமிழ் சிறந்திடுக”** (1:229) என்றும், **‘தமிழ்நாட்டில் தமிழ் தலைமை பெற்றுத் தழைத்திடுக’** (1:229) என்றும் பாரதியார் கூறுவார். தமிழை முன்னிலைப் படுத்தியே அவர் கல்விக் கொள்கை அமைகிறது. தமிழ்மொழியில் கல்விப்பயிற்சியும், திறனும் தான் கல்வியின் அடிப்படையாக அவர் உணர்ந்திருந்தார். எனவே எழுத்து என்று அவர் வரைவது, தமிழ் மொழியின் அடிப்படை இலக்கண மொழிப் பயிற்சியேயாகும் எனலாம்.

**படிப்பு :**

கல்வித் திட்டத்தின் ஒரு பகுதியாக ‘படிப்பு’ என்பதைக் குறிப்பிடுகிறார். படிப்பு என்பது Study என்ற பொருளில் அல்லாமல், Reading வாசித்தல் என்ற பொருளில் பாரதியார் பயன்படுத்துகிறார் என்றே சொல்லவேண்டும். Study என்பது ‘கல்வி’ என்ற பொருளில் மிகபரந்த கால, பொருள் எல்லைகளைக் கொண்டது. ஆனால் Reading என்பது வாசிப்பு. வாய்விட்டு ஒலித்துப் படித்தல்’ இது என்பது போல் நிரனுக்கு அப்படை எனவே பாரதி, தம் கல்வித் திட்டத்தில் எழுத்து, படிப்பு என்பதை, மாணவர் திறன் (Skill) என்ற அடிப்படையிலேயே அமைந்தார் எனலாம். எழுத்து, படிப்பு என்பதை அறிவின் அலகுகளாகக் கருதாமல், திறன்களின் தொகுதிகளாகக் கருதுவது தொலைநோக்குடைய கல்வியியல் சிந்தனையாகும்.

**கணக்கு**

**‘கணித அறிவில்லாமல், கல்வியில்லை’ ‘எண்ணென்ப, எனை எழுத்தென்ப’ என்றும், ‘எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்**’ என்றும் தொன்று தொட்டு வரும் மரபுமொழிகள், கணிதத்தின் முக்கியத்துவத்தைப் புலப்படுத்தும்’ பாரதியும் எழுத்து, படிப்பு ஆகியவற்றோடு இணைத்தே கணிதப் பாடத்தை அமைத்திருக்கிறார். பாரதியார் இந்த மூன்று பாடங்களையும் ஒன்றாகவே இணைத்து ஒரே தொகுப்பிலேயே அமைத்திருக்கிறார்.

**வரலாறு:**

மாணவனுக்கு வரலாற்றறிவு இருக்கவேண்டும் என்பதில் பாரதி நம்பிக்கை கொண்டிருந்தார். வரலாறு கற்பித்துத் தரவேண்டும் என்று வலியுறுத்தி பாரதி கூறும் போது, இந்திய வரலாற்றுக்கும், உலகவரலாற்றுக்கும் இடம் அளிக்கிறார். ‘வரலாறு’, பாடத்தில் இடம் பெற வேண்டும் என்று பாரதி கருதும் செய்திகளைக் கீழ்க் காணுமாறு தொகுக்கலாம்.

**(அ) இந்திய வரலாறு:**

1) வேதகால சரித்திரம்

2) புராண கால சரித்திரம்

3) பௌத்த கால சரித்திரம்

4) ராஜ புதன சரித்திரம்.

(ஆ) வட்டார வரலாறு : தாம் வாழும் மாகாண சரித்திரம். (மாகாணம் என்பது, மொழிவாரியான பகுதிகள்) தத்தம் மொழிபேசும் பகுதிகளின் வரலாறு.

**(இ)பேரரசர்களின் வரலாறு:** அசோகன், விக்ரமாதித்யன், இராமன், லட்சுமணன், தர்மன், அர்ச்சுனன் ஆகியோர் வரலாறு' அரசர்கள், தலைவர்களின் வரலாறு கற்பிக்கும் போது, (வெறும் அரசியல் நிகழ்ச்சிகள் மட்டுமல்லாமல்) அவர்களுடைய நல்ல குணங்களையும், அவற்றால் குடிமக்கள் பெற்ற நன்மைகளையும் உணர்ந்து கொள்ளும்படி கற்பிக்க வேண்டும் என்கிறார்.

ஈ) **உலகவாலாறு:** அராபிய, பாரசீக, ஐரிஷ், போலிஷ், குசிய, எகிப்திய, இங்கிலீசு, பிரெஞ்சு அமெரிக்க, இத்தாலிய, கிரேக்க, ஜப்பானிய அருக்க தேசங்களின் முக்கியமான கதைகள் கற்பிக்கப்பட வேண்டும் என்கிறார்.

பாரதியார் வரைந்தளிக்கும் வரலாறு பாடத்திட்டமானது, மாணவரை இந்திய மற்றும் உலக நாடுகளின் வரலாற்றைப் பற்றிய செய்திகளை அறியன் செய்வதோடு மட்டுமல்லாமல், புகழ்பெற்ற தலைவர்களின் நற்குணங்களையும், அதனால் மக்கள் பெற்ற பலன்களையும் உணணரச் செய்யும் நோக்கிலேயே அமைக்கப்படுகிறது. அதாவது வரலாறு கற்பிக்கப்படுவதன் மூலம், பழைய நிகழ்வுகளை அறியச் செய்லதுடன், நிகழ் காலத்தில் அரசு-மக்கள் உறவுநிலை குறித்த கருத்தாக்கத்தையும் உருவாக்குவதாக அமைந்துள்ளது. இப்பாட அமைப்பில், பாரதியாரின் தொலை நோக்கும் புலப்படுகிறது. 'மொழி வாரி மாநிலங்கள்' என்ற கருத்தாக்கமே தோன்றியிராத அந்தக் காலத்திலேயே, மாகாணம் என்பது, மொழியின் அடிப்படையில் தான் அமைய வேண்டும் என்று கருதினார் பாரதி. "இங்கு நான் மாகாணம் என வகுப்பது, சென்னை மாகாணம், பம்பாய் மாகாணம் முதலிய தற்காலப் பகுதிகளைக் குறிப்பதன்று' பாஷைப் பிரிவுகளுக்கு இசைந்தவாறு வருக்கப்படும் தமிழ்நாடு, தெலுங்கு நாடு, மலையாள நாடு முதலிய பகுதிகளைக் குறிப்பது" என்று எழுதுகிறார். எவ்வளவு அற்புதமான தொலைநோக்குப் பார்வை இது நாம் வாழும் வட்டார வரலாற்றை மாணவர் அறிந்து கொள்ளச் செய்ய வேண்டும் என்பதில் பாரதியார் மிக விருப்பம் கொண்டிருந்தார்.

**தொகுப்புரை**

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் 19ஆம் நூற்றாண்டிலேயே அதிக கல்வித் தகுதியைப் பெற்றிருந்ததுடன் பல மொழிகளிலும் தேர்ச்சிபெற்றிருந்தார். இப்புவியில் 39 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்த பாரதி தேச பக்தி, சாதி எதிர்ப்பு, ஆண்-பெண் சமத்துவம், நவீனத் தமிழ் மொழி வளர்ச்சி ஆகிய தளங்களில் அளப்பரிய பங்களிப்பு ஆற்றியுள்ளார். இவற்றோடு கல்வியின் முக்கியத்துவத்தையும் எப்படிப்பட்ட கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் கல்வியில் மொழியின் பங்கு குறித்தும் இன்றைக்கும் பொருந்தக்கூடிய பல தீர்க்கமான பார்வைகளையும் தொலைநோக்குச் சிந்தனைகளையும் தனது கவிதைகளிலும் கட்டுரைகளிலும் அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் வெளிப்படுத்திய கருத்துகள், பாரதியின் பன்முக ஆளுமையை வியந்து போற்றுவதற்கான இன்னுமொரு காரணத்தைத் தருகின்றன.

**துணை நின்ற நூல்கள்:**


1) மகாகவி பாரதி - பன்முகப்பார்வை
மகாகவி பாரதியார் நூலகம்
யு.வி. ஆர். அரங்கம்மாள் இல்லம்,
பாரதியார் பல்கலைக்கழகம்(அஞ்சல்)
கோயம்புத்தூர் - 641046
2) பாரதியார் - பெண்கள் விடுதலைக்கும்மி,
பாரதியார் கவிதைகள்,
பூம்புகார் பிரசுரம்,
முதற்பதிப்பு. சென்னை – மே. 1976
3) பாரதியார் - தமிழ்த்தாய்,
பாரதியார் கவிதைகள்,
பூம்புகார் பிரசுரம்,
முதற்பதிப்பு. சென்னை – மே. 1976
4) பாரதியார் - பாரதியார் கவிதைகள்,
பூம்புகார் பிரசுரம்,
முதற்பதிப்பு. சென்னை – மே. 1976
5) பாரதியார் - பாரத தேசம்,
பாரதியார் கவிதைகள்,
பூம்புகார் பிரசுரம்,
முதற்பதிப்பு. சென்னை – மே. 1976